A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 84 / 2023**

**BY RPAD**

திரு V.ஆல்பிரட்,
M/s. ஆல்பிரட் ஷாமில் & டிம்பர் டிப்போட்,
ஒழுகினசேரி கிழக்கு, அப்டா மார்க்கட் அருகில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு V.ஆல்பிரட்)

எதிர்

செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்)

**மனு பெறப்பட்ட நாள்: 18-11-2023**

**கேட்புரை நாள்: 11-01-2024**

**ஆணை நாள்: 24-01-2024**

18.11.2023 அன்று பெறப்பட்ட திரு V.ஆல்பிரட், M/s. ஆல்பிரட் ஷாமில் & டிம்பர் டிப்போட், ஒழுகினசேரி கிழக்கு, அப்டா மார்க்கட் அருகில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 84/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.01.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையின் மூலம் பெறப்பட்ட வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது மின் இணைப்பு எண் 07–111–123–202–இல் கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் வட்டியுடன் திருப்பி தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது மின் இணைப்பு எண் 07–111–123–202–இல் 10.05.2012 முதல் 16.11.2022 வரை அதிகமாக வசூல் செய்யப்பட்ட நிலையான கட்டணத்தினை திரும்ப வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் புகாரின் அடிப்படையில் இளநிலை பொறியாளர்/ விநியோகம் / வடசேரி அவர்கள் களஆய்வு செய்து மேற்கண்ட மின்இணைப்பில் மொத்த மின் பளு 39.13KW என்பது உறுதி செய்யப்பட்டதாகவும், அதிகமாக வசூல் செய்த நிலையான கட்டணங்களை திருப்பி வழங்க வழிவகை இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்/ நாகர்கோவில், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்/நாகர்கோவில் 25.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்/நாகர்கோவில், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 25.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மின்னிணைப்பு எண் 111-123-202-ல் மின்பளு தொடர்பாக மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் விரைவாக மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு தலைமை பொறியாளர் அலுவலகம் மூலம் கணினியில் மின்னிணைப்பில் இருந்த மின்பளு திருத்தம் செய்து Tarriff order no: 01/2002, நாள் 10.09.2022-ன்படி மின்னிணைப்பிலுள்ள நிலையான கட்டணம் சரியாக வசூல்செய்யப்பட்டு வருகிறது. பழைய காலங்களுக்கு வசூல் செய்த நிலைகட்டணம் திருப்பி தர இயலாது என ஆணையிட்டு முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 11.01.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு V.ஆல்பிரட் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு N.K. ஜவஹர் முத்து, செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திரு V. ஆல்பிரட் M/s.Alfred Saw Mill & Timber Depot என்கிற மர அறுவை ஆலையை நடத்தி வருவதாகவும், தன்னுடைய EB.Service No.07111123202 எனவும், அந்த மின் இணைப்பில் பெற்றிருந்த மின்பளுவானது 51.25HP என்பதை

தவறுதலாக 51.25KW என்று 2012-ம் ஆண்டு கணினியில் பதிவு செய்து விட்டார்கள் என்றும் அன்றிலிருந்து அதாவது 10.05.2012 முதல் 16.11.2022 வரை நிலை கட்டணம் 52 KWக்கு வசூல் செய்துள்ளார்கள் என்றும் அதற்கு அவர் அளித்த மனுவை பரிசீலித்து அறுவை ஆலையில் களஆய்வு செய்து தவறை திருத்தி மின்பளுவை 40KW என உறுதி செய்து 21.01.2023-ல் குறைத்து சரிசெய்து கொடுத்துள்ளதாகவும், தன்னிடமிருந்து 40KW-க்கு பதிலாக 52KW-க்கு வசூல் செய்ததால் 12KWக்குரிய நிலையான கட்டணம் பத்து வருடங்களாக ரூ.62,224/-யை அதிகமாக வசூலித்துள்ளதாகவும், எனவே அதிகமாக வசூலித்த நிலை கட்டணத்தை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வரும் மின்கட்டணத்தில் குறைவு செய்து தருமாறு கேட்டு விண்ணபித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் 15.05.2023 அன்று CGRF-க்கு கோரிக்கை மனு ஒன்று அனுப்பியிருந்ததாகவும், அந்த மனுவுக்கு CGRF அளித்த தீர்ப்பின் விபரத்தை இதில் தெரிவித்திருப்பதாகவும், மன்றம் அளித்த தீர்ப்பு உத்தரவில் தான் 01.05.2023 அன்று மனு செய்ததாக தவறாக குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் தான் மனு கொடுத்த நாள் 15.05.2023 என்று குறிப்பிட்டு CGRF தங்களுக்கு மனு கிடைத்தது என்று ஊர்ஜிதம் செய்து பதில் தனக்கு அனுப்பியதாகவும், மேலும் தன்னை விசாரணைக்கு அழைத்து அனுப்பிய கடிதத்திலும் மனு நாள் 15.05.2023 என்று தெரிவித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்,

5.3 தன்னை விசாரணைக்கு அழைத்த தபால் தனக்கு 26.05.2023 அன்று தான் கிடைக்கப்பெற்றதாகவும், ஆனால் அதில் விசாரணை நாள் 25.05.2023 முற்பகல் 11.00 மணி என்று குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், தேரேகால் புதூர் அஞ்சல் தபால்காரர் தனக்கு தபால் Delivery செய்தது 26.05.2023 அன்று தான் என்றும், தபால் தனக்கு தாமதமாக அளிக்கப்பட்டதால் அன்றைய தினம் தன்னால் விசாரணைக்கு கலந்து கொள்ள முடியவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தான் 21.07.2023 அன்று தன்னை மறு விசாரணைக்கு அழைக்க மனு கொடுத்திருந்ததாகவும், ஆனால் அவர்கள் தன்னை மறு விசாரணைக்கு அழைக்கவில்லை அது ஏன் என்றும் தெரியவில்லை எனவும், தன்னை மறுவிசாரணைக்கு அழைக்காமலே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், தீர்ப்பின் உத்தரவு

நாள் 25.05.2023 என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதாகவும், தீர்ப்பின் உத்தரவு நாளில் முரண்பாடு உள்ளது என்னவென்றால் தீர்ப்பின் உத்தரவின் நான்காவது பக்கத்தில் 5வது வரியில் Executive Engineer–ன் 12.10.2023/1930/23 அன்று CGRF–க்கு அளித்த பதிலுரையினை பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கியதாக கூறப்பட்டுள்ளதாகவும், இதிலிருந்து உத்தரவு தேதி முன் தேதியிட்டு தவறுதலாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று புலனாகிறது என்றும் E.E.12.10.2023 அன்று அளித்த பதிலின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 EE, CGRF–க்கு 24.05.2023 அன்று அளித்த எதிர் பதிலுரையில் TNERC Supply Code –12– ன் படி தவறுதலாக அதிகபடியாக வசூலிக்கப்பட்ட தொகையினை திருப்பி வழங்க வழிவகை உள்ளது என்ற விபரத்தை கோடிட்டு காட்டி தெரிவித்துள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மன்றம் அளித்த தீர்ப்பின் உத்தரவை பார்க்கும் போது தன்னுடைய கோரிக்கை மனுவின் அடிப்படையில் தன்னிடமிருந்து தவறாக அதிகமாக 10.05.2012 முதல் 16.11.2022 வரையில் வசூலித்த நிலையான கட்டண தொகையானது ரூபாய் 62,224/– என்பதை அவர்கள் தான் கொடுத்த consumer bill bimonthly collected statement வாயிலாக அறிந்து ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவதாகவும், ஆனால் நிலையான கட்டணம் பழைய கணக்கு என்பதால் திருப்பி வழங்க இயலாது என்று தீர்ப்பில் கூறியுள்ளதாகவும், இதிலிருந்து அவர்கள் அதிகமாக வசூலிக்கப்பட்டதை ஒப்புக் கொள்வதாக தெரிகிறது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 ஆகையால் தன்னிடம் அதிகமாக வசூலித்த தொகை ரூபாய். 62,224/–ம் அதோடு சேர்த்து வட்டியுடன் திருப்பி வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திரு. V. ஆல்பிரட் மின்னிணைப்பு எண்: 111–123–202–ல் வீதப்பட்டி IIIB–ல் 12.01.1998 அன்று 46HP + 900 W என்ற மின்பளுவுடன் வழங்கப்பட்டுள்ளது எனவும், பின்னர் 09.04.2003–ல் கூடுதல் மின்பளு 4.00HP அதிகம் பெற்று 50HP+900W மின்பளுவாக இருந்து உள்ளதாகவும், பின்னர் 31.07.2006–ல் கூடுதல் மின் பளு 1.25 HP

பெற்று 51.25 HP + 900 W மொத்த மின்பளுவாக இருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 30.11.2022 அன்று மனுதாரர் தனது மின் இணைப்பு எண். 111-123-202-யில் மின் பளு 51.25HP என்று பதிவு செய்யாமல் தவறாக 51.25 KW என பதிவு செய்துள்ளதாகவும், எனவே 10.05.2012 முதல் 16.11.2022 வரை அதிகமாக வசூல் செய்யப்பட்ட நிலையான கட்டணத்தினை திருப்பி கேட்டு அளித்த புகாரின் அடிப்படையில் இளநிலை பொறியாளர்/ விநியோகம் / வடசேரி அவர்கள் களஆய்வு செய்து மேற்கண்ட மின்இணைப்பில் மொத்த மின் பளு 39.13KW என்பது உறுதி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் கள ஆய்வு அறிக்கை மற்றும் 25.07.2006-யில் வழங்கப்பட்ட திருத்தப்பட்ட சோதனை அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு 17.01.2023 அன்று தலைமை பொறியாளர் திருநெல்வேலி அலுவலகத்தின் மூலம் கணினியில் உள்ள மின்பளு திருத்தம் செய்து 39.13 KW என்று பதிவு செய்யப்பட்டதாகவும், TNERC-விதிகளின்படி மின் நுகர்வோர் 30.11.2022 அன்று புகார் தெரிவித்த உடன் மேல் நடவடிக்கை எடுத்து உடனடியாக 17.01.2023 அன்று தலைமை பொறியாளர் திருநெல்வேலி அலுவலகம் மூலம் கணினியில் மின் இணைப்பு எண். 111-123-202 யில் மின்பளு திருத்தம் செய்து சரிசெய்யப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் மேற்கண்ட மின் இணைப்பில் உள்ள மின் பளுவிற்கான சரியான நிலையான கட்டணம் 01/2023 மாதம் முதல் Tariff order No. 01/2022, நாள் 10.09.2022-ன்படி வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மின் நுகர்வோர் 30.11.2022 அன்று தான் மின் பளு தவறாக இருப்பது பற்றி புகார் தெரிவித்திருப்பதால் பழைய காலங்களுக்கு அதிகமாக வசூல் செய்த நிலையான கட்டணங்களை திருப்பி வழங்க வழிவகை இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு V. ஆல்பிரட் M/s.Alfred Saw Mill & Timber Depot என்கிற மர அறுவை ஆலையை நடத்தி வருவதாகவும், தன்னுடைய EB.Service No.07111123202 எனவும், அந்த மின் இணைப்பில் பெற்றிருந்த மின்பளுவானது 51.25HP என்பதை தவறுதலாக 51.25KW என்று 2012–ம் ஆண்டு கணினியில் பதிவு செய்து விட்டார்கள் என்றும் அன்றிலிருந்து அதாவது 10.05.2012 முதல் 16.11.2022 வரை நிலை கட்டணம் 52 KWக்கு வசூல் செய்துள்ளார்கள் என்றும் அதற்கு அவர் அளித்த மனுவை பரிசீலித்து அறுவை ஆலையில் களஆய்வு செய்து தவறை திருத்தி மின்பளுவை 40KW என உறுதி செய்து 21.01.2023–ல் குறைத்து சரிசெய்து கொடுத்துள்ளதாகவும், தன்னிடமிருந்து 40KW–க்கு பதிலாக 52KW–க்கு வசூல் செய்ததால் 12KWக்குரிய நிலையான கட்டணம் பத்து வருடங்களாக ரூ.62,224/–யை அதிகமாக வசூலித்துள்ளதாகவும், எனவே அதிகமாக வசூலித்த நிலை கட்டணத்தை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வரும் மின்கட்டணத்தில் குறைவு செய்து தருமாறு கேட்டு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் திரு. V. ஆல்பிரட் மின்னிணைப்பு எண்: 111–123–202–ல் வீதப்பட்டி IIIB–ல் 12.01.1998 அன்று 46HP + 900W என்ற மின்பளுவுடன் வழங்கப்பட்டுள்ளது எனவும், பின்னர் 09.04.2003–ல் கூடுதல் மின்பளு 4.00HP அதிகம் பெற்று 50HP+900W மின்பளுவாக இருந்து உள்ளதாகவும், பின்னர் 31.07.2006–ல் கூடுதல் மின் பளு 1.25 HP பெற்று 51.25 HP + 900 W மொத்த மின்பளுவாக இருந்ததாகவும், 30.11.2022 அன்று மின் பளு 51.25HP என்று பதிவு செய்யாமல் தவறாக 51.25 KW என பதிவு செய்துள்ளதாகவும், எனவே 10.05.2012 முதல் 16.11.2022 வரை அதிகமாக வசூல் செய்யப்பட்ட நிலையான கட்டணத்தினை திருப்பி கேட்டு அளித்த புகாரின் அடிப்படையில் இளநிலை பொறியாளர்/ விநியோகம் / வடசேரி அவர்கள் களஆய்வு செய்து மேற்கண்ட மின்இணைப்பில் மொத்த மின் பளு 39.13KW என்பது உறுதி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும் மின் நுகர்வோர் 30.11.2022 அன்று புகார் தெரிவித்த உடன் மேல் நடவடிக்கை எடுத்து உடனடியாக 17.01.2023 அன்று தலைமை பொறியாளர் திருநெல்வேலி அலுவலகம் மூலம் கணினியில் மின் இணைப்பு எண். 111–123–202 யில்

மின்பளு திருத்தம் செய்து சரிசெய்யப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் மேற்கண்ட மின் இணைப்பில் உள்ள மின் பளுவிற்கான சரியான நிலையான கட்டணம் 01/2023 மாதம் முதல் Tariff order No. 01/2022, நாள் 10.09.2022–ன்படி வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்கூறிய வாதி பிரதிவாதி வாதங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 111–123–202–இல் மின்பளு 51.25 HP ஆக பதிவு செய்யாமல் தவறுதலாக 51.2KW என்று 2012 –ல் பதிவு செய்ததை எதிர்மனுதாரர் ஒப்பு கொண்ட பின்பு அத்தொகையை திருப்பி தர மறுக்கும் நிலையில் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி 12 –ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**12. Errors in billing***

*(1) In the event of any clerical errors or mistakes in the amount levied, demanded or charged by the Licensee, the Licensee will have the right to demand an additional amount in case of undercharging and the consumer will have the right to get refund of the excess amount in the case of overcharging.*

*(2) Where it is found that the consumer has been over-charged, the excess amount paid in such cases will be adjusted against future current consumption charges. If, even after such against future current consumption charges for two assessment periods, there is still a balance to be refunded, the refund will be made by cheque."*

7.6 மேற்கூறிய விதிகளின்படி உரிமதாரர் கட்டும்படி சொன்ன, கேட்ட அல்லது விதித்த தொகையில் எழுத்தர் பிழைகளோ, தவறுகளோ இருக்கும்போது குறைவாகக் கட்டம் விதிக்கப்பட்டிருந்தால் கூடுதல் கட்டணம் விதிக்க உரிமதாரருக்கு உரிமையுண்டு. அதேபோல் அதிகமாக கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால், அதை மீளத் தரும்படி கேட்க நுகர்வோருக்கு உரிமையுண்டு எனவும், நுகர்வோருக்கு கூடுதலாகக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய நிகழ்வுகளில், கட்டப்பட்ட கூடுதல் தொகையை எதிர்கால மின்னோட்ட நுகர்வுக் கட்டணங்களில் ஈடுசெய்து தரலாம் எனவும் அறியப்படுகிறது.

7.7 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் 30.11.2022–இல் அளித்த புகார் மனுவின் அடிப்படையில் அவருடைய மின் இணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின்பளு 17.01.2023–இல் 39.13KW ஆக திருத்தம் செய்யப்பட்டது தெரியவருகிறது. அதன் அடிப்படையில் 01/2023 மாதத்திலிருந்து திருத்தப்பட்ட மின்பளுவிற்கான நிலைக்கட்டணம்

வசூலிக்கப்பட்டது உறுதியாகிறது. இந்நிலையில் மேல்முறையீட்டாளர் 10.05.2012 முதல் 16.11.2022 வரை தவறாக வசூலிக்கப்பட்ட நிலை கட்டண தொகையை எதிர்வரும் மின்கட்டணத்தில் குறைவு செய்து தருமாறு கோருவது மின் வழங்கல் விதி 12 –ன்படி ஏற்புடையதாக உள்ளது என கருதுகிறேன்.

7.8 மேலும் மேல்முறையீட்டாளர் திருப்பி வழங்கும் தொகையை எதிர்வரும் மின்பயன்பாட்டில் ஈடு செய்ய ஒப்பு கொண்டதால், எதிர்மனுதாரர் 10.05.2012 முதல் 16.11.2022 வரை கூடுதலாக வசூலிக்கப்பட்ட நிலைக்கட்டணத்தை கணக்கீடு செய்து மேல்முறையீட்டாளர் மனுசெய்த 30.11.2022 அன்று முதல் ஆணையம் அவ்வப்போது காப்பு வைப்பீட்டு தொகைக்கு நிர்ணயம் செய்யும் வட்டி வீதத்தின்படி கணக்கிட்டு மேல்முறையீட்டாளரின் மின்பயன்பாட்டில் ஈடு செய்ய உத்திரவிடப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, எதிர்மனுதாரர் 10.05.2012 முதல் 16.11.2022 வரை கூடுதலாக வசூலிக்கப்பட்ட நிலைக்கட்டணத்தை மேல்முறையீட்டாளர் மனுசெய்த 30.11.2022 அன்று முதல் ஆணையம் அவ்வப்போது காப்பு வைப்பீட்டு தொகைக்கு நிர்ணயம் செய்யும் வட்டி வீதத்தின்படி கணக்கீடு செய்து மின்பயன்பாட்டில் ஈடு செய்ய உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 84/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு V.ஆல்பிரட், – By RPAD
M/s. ஆல்பிரட் ஷாமில் & டிம்பர் டிப்போட்,
ஒழுகினசேரி கிழக்கு, அப்டா மார்க்கட் அருகில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

**2. செயற்பொறியாளர்/ விநியோகம் / நாகர்கோவில்,**
**கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.**

**3. மேற்பார்வை பொறியாளர்,** – By email
**கன்னியாகுமரி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – **629 003.**

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், **–** By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144**, அண்ணாசாலை, சென்னை – **600 002.**

**5.** செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், **–** By email
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**

**6.** உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**